04.12.2023
அசல் வழக்கு எண்: 100/2018

பி.வா.சா.1 சாட்சி ராமச்சந்திரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சங்கங்களின் மாவட்ட பதிவாளர் இதுவரை பொதுச்செயலாளர் அவர்கள் அனுப்பிய ஆண்டறிக்கை வரவு செலவு கணக்குகள் மோசடியாக உள்ளது என்று பாதர்வெள்ளை மீது நடவடிக்கை எடுத்ததாக எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சங்கங்களின் மாவட்ட பதிவாளர் பாதர்வெள்ளை மீது இதுவரை நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இல்லை. நான் வாதி சங்கத்தில் எந்த வருடம் உறுப்பினராக சேர்ந்தேன் என்றால் 1969 ஆம் ஆண்டு சேர்ந்தேன். 1972ம் வருடம் என்னை வாதி சங்கத்தில் கிளைச்செயலாளராக நியமித்தார்கள் என்றால் சரிதான். சங்க செயல்பாடுகளில் திருப்தி இல்லாததால் 1984ம் ஆண்டு வாக்கில் கிளைச்செயலர் பதவியில் இருந்தும், உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கி விட்டார்கள் என்றால் மத்திய சங்கத்தில் இரு அணியாக பிளவு பட்டது நாங்கள் எங்கள் அணியில் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்ட பிறகு நாராயணன், ஆர்.ராமையா, ஏ,ராமையா, நாகராஜ் ஆகியோர்களை நீக்கினோம். அவர்களும், என்னை உட்பட என்.பொன்ராஜ், கே,பாண்டியன் ஆகியோரை நீக்கினார்கள்.

சிவனாத் என்பவர் சீதாலட்சுமி மில்லில் நிர்வாகியாக இருந்தார் என்றால் சரிதான். அவர் நிர்வாகிய இருந்த போது கொலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். அந்த கொலை வழக்கில் காவல்துறையினர் என்னை குற்றவாளியாக சேர்திருக்கிறார்கள் என்றால் பொய்யாக சேர்த்துள்ளார்கள். அந்த வழக்கில் நான் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தேன் என்றால்

சரிதான். அந்த கொலை வழக்கில் விசாரணை நடைபெற்று எனக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்னை குற்றாவாளியாக சேர்க்கப்பட்டதால் தான் வாதி சங்கத்தில் இருந்து கிளைச்செயலாளர் பதவியில் இருந்தும், உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் தான் வாதி சங்கத்தில் இருந்து என்னை நீக்கினார்கள் என்றாலும், மத்திய சங்கத்தில் இரண்டு பிரிவுகளாக பிரிந்ததால் என்னை நீக்கினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

எனக்கு கொடுத்த, தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேல்முறையீட தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு தண்டனை காலத்தை சிறையில் இருந்து அனுபவித்து முடித்தேன் என்றால் சரிதான். 1983 முதல் 2002 வரை வாதி சங்கத்தின் சிவராஜ், சுந்தரம், சிவக்குமார், ஏட்டுச்சாமி ஆகியோர்கள் சீதாலட்சுமி மில் சங்கத்தின் கிளைச்செயலாளராக இருந்ததாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை.

சீதாலட்சுமி மில் சங்கத்தில் கிளைச்செயலாளராக பதவி இழந்த நான் கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்தேன் என்றால் மத்திய சங்கம் இரண்டாக பிளவு பட்ட பிறகு ஆரம்பித்தோம். மேற்படி சங்கம் 1984 ல் ஆரம்பித்தோம். 1984 க்கு பிறகு வாதி சங்கத்திற்கும், சீதாலட்சுமி மில் கிளைச் சங்கத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றால் சரிதான்.

திரு.ராமையா, திரு.நாராயணன் ஆகிய இருவரும் 22.04.1984 ம் தேதி எனக்கு கடிதம் எழுதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கடிதத்தில் தாவாச் சொத்தை கிரையம் வாங்கிய அசல் பத்திரத்தையும், தாவாச் சொத்து இருந்த கட்டிடத்தின் பொறுப்பையும் ஒப்படைக்கும் படி கோரியிருந்தார்கள் என்றால் சரிதான். ஆதியில் தாவாச் சொத்தில் ஓட்டு தாழ்வாரம் போட்ட மேற்கோப்பு இருந்தது என்றால் சரிதான். அந்த ஓட்டு தாழ்வாரம் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே இடிந்து விழுந்து விட்டது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுத்தாழ்வாரம் போட்ட கட்டிடத்திற்கு வீட்டு வரி ஏற்பட்டு இருந்ததா என்றால் ஏற்பட்டிருந்தது. வீட்டு வரி சங்கத்தின் பேரில் ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல, என் பெயரிலும், சங்கத்தின் பெயரிலும் ஏற்பட்டிருந்தது. அவ்வாறு வரி செலுத்தியிருந்தால் 1984 ம் வருடத்திற்கு முன்பாகத்தான் செலுத்தியிருக்க வேண்டும் என்றால் 1984 க்கு முன்பாகவும், பின்பாகவும் செலுத்தியுள்ளேன். நான் வரி செலுத்தியது கிளைச் செயலாளர் என்ற அடிப்படையில் தான் செலுத்தினேன் என்றால் சரிதான். நான் வரி செலுத்தியதாக சொல்லப்படும் இரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் அவ்வாறு வீட்டு வரி ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி கட்டிடத்திற்கு மின் இணைப்பு இருந்தது என்றால் சரிதான். அந்த மின் இணைப்பு நான் கிளைச்செயலாளர் என்ற அடிப்படையில் எனது பெயரில் பெறப்பட்டது என்றால் சரிதான். தாவாச் சொத்து 09.09.1981 ல் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி

கிரையபத்திரமான வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் கிரையம் வாங்கிய நபர்களாக மதுரை ஜில்லா மில் தொழிலாளர்கள் சங்கம், மதுரை தனக்கன்குளம் சீதாலட்சுமி மில் கிளைக்காக மேற்படி சங்கத்தின் தலைவர் ராமையா, கிளைச்செயலாளர் ராமச்சந்திரன், இரண்டு பேர்கள் மூலம் கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் நான் எனது சொந்த பணத்தை போட்டு கிரையம் வாங்கினேன். சங்கத்தின் பணத்தில் தான் கிரையம் பெறப்பட்டது என்றாலும், எனது சொந்த செலவில் கிரையம் வாங்கியதாக சொல்வது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

கிரையம் முடிந்து பிறகு கிரைய ஆவணத்தை மத்திய சங்கத்தில் ஒப்படைத்து விட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு மின் இணைப்பு பெறுவதற்காக அசல் ஆவணத்தை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு அசல் ஆவணத்தை பெற்றுக்கொண்டதற்கு 13.11.1983 ம் தேதி ஒரு ஒப்புதல் கடிதம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணம் தான் அந்த ஒப்புதல் கடிதம் என்றால் சரிதான்.

கிரைய பத்திரத்தை பெற்றுக்கொண்ட பிறகு மின் இணைப்பு பெற்றவிட்டேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் இருந்த ஓட்டுத்தாழ்வாரம் இடிந்து 15 வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 7 அல்லது 8 வருடங்கள் இருக்கும். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கட்டிடம் இடிந்த பிறகு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பிறகு நான் மின் கட்டணம்

செலுத்தவில்லையென்றால் சரிதான். நான் செலுத்தியுள்ள மிண் கட்டண இரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். தாவாச் சொத்தில் தற்பொழுது தகரசெட்டு உள்ளது என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் சரிதான். மேற்படி தகரசெட்டு வழக்கிற்கு பின்பு போடப்பட்டது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்து காலியிடமாக இருந்தது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் தகரசெட்டு இருந்தாலும், தாவா சொத்து எனது கட்டுப்பாட்டிலோ, அனுபவத்திலோ இல்லையென்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என் வாதம் பொய்யானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

/Sd/Thiru.C.Dineshkumar,
Additional District Munsif Court (FAC)
Thirumangalam.